குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.249/2023

அ.சா. 9

2025–ம் ஆண்டு நவம்பர் 04–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 0–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மோகன் | தொழில் | |
| தந்தை பெயர் | முத்துசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.34 மணி,

Accused A1.Gnanasekar, A2.Nandhivarman are present. Advocate Mr.Mahalingam present for both accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது, ஓமலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 27.08.2023 ஆம் தேதி பணியில் இருந்தபோது சஞ்சய் த/பெ. முருகேசன் என்பவரை அவரது உறவினர் நல்லதம்பி என்பவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது, அவர் தன்னை தனது வீட்டிற்கு அருகில் அன்றைய தினம் மாலை 05.30 மணிக்கு அடையாம் தெரிந்த 4 நபர்கள் கையாலும், தடியாலும் அடித்ததாக கூறினார்.

2. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவரை பரிசோதித்தபோது, அவரது இடது கண்ணுக்கு அருகில் கன்றிய காயம் இருந்தது. அவர் வலது காது அருகில் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சஞ்சய் என்பவரது விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கியது தான். ( **அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் விசாரித்தார்கள்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.04 17:32:16 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. அ.சா.1 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது தன்னை 4 நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரி. அ.சா.1–ற்கு கண்ணுக்கு அருகில் ஏற்பட்டுள்ள கண்ணிய காயம் ஒரு நபர் கூர்மையான பகுதியில் இடித்துக்கொண்டால் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரி. அ.சா.1 தனக்கு காதில் வலி இருப்பதாக தன்னிச்சையாக பொய்யாக கூறியிருக்க வாய்ப்புள்ளது என்றால் சரி.

4. அ.சா.1 மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அன்றைய தினமே மருத்துவமனையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டார் என்றால் அது பற்றி தற்போது எனக்கு தெரியவில்லை. மேற்படி விபரம் மருத்துவ கோப்புகளை பார்த்தால் தான் சொல்லமுடியும். அ.சா.1 தனக்கு காயம் ஏற்பட்டதாக கூறிய நேரத்திற்கு முன்னதாகவே மேற்படி காயம் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 11.43 மணி.**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.04 17:32:19 +0530